[2012 ஏப்ரல் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் பேச வேண்டிய சூழ்நிலை உள்ளது. 11–00 மணிக்குக் கேள்வி நேரத்தை முடிக்க வேண்டியிருப்பதால், இதே கேள்வி குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ம. சக்தி, திரு. எம்.கே. அசோக், திரு. தா. மலரவன், முனைவர் கோவி. செழியன், திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. என். முருகுமாறன் ஆகியோர் தங்களுடைய தொகுதிகளில் ஏரியைத் தூர் வாருவது குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

சுற்றுலாத் தலம்

***7668—திரு. கே.பி. நாகராஜன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதியில் உள்ள வீடூர் அணைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வீடூர் அணையைச் சுற்றுலாத் தலமாகக் கருதி, ஏற்கெனவே அதன் மேம்பாட்டிற்காக மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின் அடிப்படையில், ரூபாய் 50 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு செய்து, அதிலே சுற்றுலாத் துறையின் பங்காக ரூபாய் 30 இலட்சம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு, அங்கு நிலச் சீரமைப்புடன் பூங்கா அமைத்தல், அமரும் இருக்கைகள் அமைத்தல், குழந்தைகளுக்கான விளையாட்டுக் கருவிகள் அமைத்தல், பூங்காவில் மின் விளக்கு வசதி செய்தல், பூங்காவைச் சுற்றி வேலி அமைத்தல்

ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு ஏற்கெனவே பயன்பாட்டிலே உள்ளன.

மயிலம் தொகுதி, வீடூர் அணையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளது என்ற கருத்துரு மாவட்ட ஆட்சியரிடம் பெறப்படும் சூழ்நிலையில், மேற்கொண்டு மேம்பாட்டுப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

திரு. கே.பி. நாகராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகு என்றால் முருகப்பெருமானைக் குறிக்கும். தமிழகத்தின் முதல்வர் என்றால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் குறிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் வீடூர் அணை, சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. அங்கே மயில்கள் பூங்காவும், ராமர் பூங்காவும், கடவுள் விநாயகப் பெருமானின் பூங்காவும், நடராஜர் பெருமான் பூங்காவும் இருக்கின்றது. பக்கத்தில் முருகப் பெருமான் கோவிலும் அங்கு இருக்கின்றது. பிரசித்தி பெற்ற திருவக்கரை வக்ர காளியம்மன் கோயிலும் அங்கே இருக்கின்றது. ஆகையினால், அங்கு 3,200 ஹெக்டேர் நிலப்பரப்பிலே நீர்ப் பாசன வசதி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அந்த வீடூர் அணையைச் சுற்றுலாத் தலமாக அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, மயில்கள் பூங்கா, நடராஜர் பெருமான் பூங்கா, விநாயகர் பூங்கா போன்ற பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பது குறித்து

மாவட்ட ஆட்சியரிடம் கருத்துரு பெற்று, சுற்றுலாத் துறை மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்தப் பயணிகளுக்கு உரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததன் அடிப்படையில், விழுப்புரம் மாவட்டம், திருவக்கரை அருள்மிகு வக்ர காளியம்மன் திருக்கோயில் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக மாநில அரசு நிதி உதவித் திட்டத்தில் ரூபாய் 47.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அணுகுச் சாலை, கழிப்பறை வசதிகள், யாத்ரி நிவாஸ் அமைப்பதற்கான நிதி விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு அது ஏற்கெனவே சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிலே உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

திரு. கே.பி. நாகராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

முற்பகல் 10—50

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய சுற்றுலாத் தலமாகிய கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமப் பகுதியில் அய்யன் திருவள்ளுவருக்கு 133 அடி உயர சிலை தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. கடல் உப்புக் காற்றினாலும், மழை மற்றும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி மயிலம் தொகுதி பற்றியது. இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.